135

# PILGRIMAGE TO SACRED WATERS.

Second Edition, 5,000.—Total Copies, 7,000.

# தீர்த்தயாத்திரை.



MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

By H. W. Laurie, Christian Knowledge Society's Press.

No. 18, Church Street, Vepery.

1870.

**No. 60.** *One Pie.* க பை.

# வேதவாக்கியங்கள்.

நீதிபரனும் இரட்சகருமாகிய நம்மையல்லாமல், வேறொருவரும் இல்லை. பூமியின் எல்லா எல்லைகளே, நம்மை நோக்கி நோக்குங்கள்; அப்போது இரட்சிக்கப்படுவீர்கள்; நாமே தேவன், வேறொருவரும் இல்லை. (ஏசாயா, சடு. உக, உஉ.)

நீதிமான்களாக்கப்படுவதற்கு இருதயத்தோடே விசுவாசிக்கவும், இரட்சிக்கப்படுவதற்கு வாயினாலே அறிக்கையிடவும் வேண்டுவதால், நீ உன் வாயினாலே கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிட்டு, பராபரன் அவரை மரித்தோரிலிருந்து எழும்பப்பண்ணினார் என்று உன் இருதயத்தோடே விசுவாசித்தால், இரட்சிக்கப்படுவாய். (உரோமர், ௰. கூ, ௰.)

பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவரையே கொடுத்து, இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாயிருந்தார். (யோவான், ௩. ௰சு.)

குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய சீவனை உடையவனாய் இருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவன் சீவனைக் காண்பதில்லை; பராபரனுடைய கோபாக்கினையே அவன்மேல் நிலைநிற்கும். (யோவான், ௩. ௩சு.)

# PILGRIMAGE TO SACRED WATERS.

# தீர்த்தயாத்திரை.

ஓ, சனங்களே! நீங்கள் காசி இராமேசுரம் கன்னியாகுமரி முதலான ஸ்தலங்களில் சென்று, அங்குள்ள நதிகளிலும் சமுத்திரத்திலும் தடாகங்களிலும் தீர்த்தமாடி வருகிறீர்களே. அதினாலே உங்கள் பாவங்கள் தொலைந்துபோனதாக எண்ணிக்கொண்டு, உங்கள் வீடுகளுக்குத் திரும்புகிறீர்கள். சங்கற்பம்பண்ணித் தானதருமங்களைச் செய்து, ஸ்நானம்பண்ணுகிறதினாலே பாவங்கள் நீங்கிப்போகும் என்று ஒருக்காலும் சொல்லக்கூடாது. நீங்கும் என்று சொன்னால், அதற்கு நிறைவான அத்தாட்சி இருக்கவேண்டும். பாருங்கள்: ஒருவன் தன் கழுத்தைச் சுற்றின கண்டமாலை வியாதி ஒரு மருந்தி

ஞலே நீங்கிப்போயிற்று என்று சொன்ஞல் அதை நாம் நம்பும்படிக்கு அந்தப் புண்ணிலி ருந்து வடியும் சலம் நின்று, அது ஆறியிருப்ப தை நமது கண்ஞரக் காணவேண்டுமே. அப் படி இல்லாமல் அந்தப் புண் முன்போலச் சீழ் வடிய நொதித்துக்கொண்டிருந்தால், அந்த வி யாதி இதமாகிப் போயிற்று என்று சொல்லு வோமா? அப்படி ஆயிரம்பேர் கூடிச் சொன்ஞ லும் அது காட்சிக்கு விரோதம் ஆனதால், அ தை ஒருவனும் நம்பமாட்டானே. அப்படியே தீர்த்தம் ஆடின ஒருவன் தன் பாவங்கள் எல் லாம் நீங்கிப்போயிற்று என்று சொல்லிக்கொ ண்டாலும், அவன் பாவத்தில் நிலைத்திருக்கிற தை நாம் கண்டால், அவன் சொல்லை நம்புவது எப்படி? தீர்த்தம் ஆடிஞல் பாவம் தொலையும் என்று உங்கள் புராணங்களில் சொல்லியிருக் கிறதிஞலும், தீர்த்தம் ஆடுகிறது பாரம்பரை வ ழக்கம் ஆனதிஞலும், அதிஞல் ஆதாயம் பெற் றுக்கொள்ளுகிறவர்கள் அதைப் புகழுகிறதிஞ லும் அப்படி ஆகும் என்று நம்புகிறீர்கள். தீர்த் தம் ஆடிவருகிற அநேகர் நமக்குள்ளே சஞ்ச ரிக்கிருர்களே; அவர்களுடைய முன் நடக்கை யையும் பின் நடக்கையையும் ஒத்துப்பார்க்

கையில், யாதொரு நற்சீரைக் காண இடம் இல்லையே.

அவர்களில் முன்பு பொய், வஞ்சனை, திருட்டு, புரட்டு முதலான பாவங்களைச் செய்துவந்தவர்கள் தீர்த்தமாடின பின்பும் அப்படிச் செய்கிறார்கள். முன்பு வெறியிலும், உதாசனப்பேச்சிலும், வேசித்தனத்திலும் சிக்கிக்கொண்டவர்கள் தீர்த்தமாடின பின்பும் அப்படியே இருக்கிறார்கள். முன் நியாயத்தைப் புரட்டி, குடிகளை ஒடுக்கி, கைக்கூலி சன்மானங்களை வாங்கி வந்தவர்கள் தீர்த்தமாடின பின்பும் அப்படியே செய்கிறார்கள். அப்படியிருக்க, ஸ்நானமானது பாவத்தை நீக்கிவிடும் என்று எப்படிச் சொல்லலாம்? அதினாலே அப்படிப்பட்டவர்களுடைய புத்தி, சித்தம், ஆசை, நோக்கம் என்பவைகள் மாற்றப்படாதிருப்பதால், அவர்கள் முன் இருந்த சீர்கேடான நிலைமையிலே இருக்கிறார்கள்.

மேலும் ஸ்நானமானது பாவத்தைப் போக்குகிறதற்குத் தகுதியான ஒரு எத்தனம் அல்லவே. ஸ்நானம்பண்ணுவதினாலே சரீரத்திலுள்ள அழுக்கு நீங்குமே அல்லாமல், உள்ளத்தில் பற்றி நிற்கிற பகை, குரோதம், பொறாமை,

பொருளாசை, அகந்தை முதலான பாவங்கள் நீங்கமாட்டாதே. அதைக்குறித்து,

காசிக்குப் போனாலும் அகப்பேய் கன்மந் தொலையாதே
ஊத்தைப் போனாலும் அகப்பேய் உள்வினை தீராதே
ஆறு கண்டாயோ அகப்பேய் அந்த வினைதீரத்
தேறித் தெளிவதெல்லாம் அகப்பேய் தீர்த்தமாமடியே

என்று அகப்பைச் சித்தரும்,

காசிகாசி யென்றுநீர் கால்கடுக்க வோடுநீர்
காசியோடி யாடினும் கறுப்பு வெள்ளை யாகுமோ
ஆசைபாசம் விட்டுநீ ரைவரு மொடுங்கினற்
காசிநீரு மும்முள்ளே காணலாகு முண்மையே

என்று சிவவாக்கியரும் பாடியிருக்கிறார்கள்.

அதுவுமல்லாமல், பங்காள நாட்டில் பண்டாப்பூரிலுள்ள துக்காராம் என்றொரு சந்நியாசி, தீர்த்தமாடுவதினால் பாவம் தொலையாது என்பதைக் குறித்துக் காட்டியிருக்கிற ஒரு திருஷ்டாந்தத்தைப் பாருங்கள்.

அவன் இந்துமதத்திலுள்ள புராண சாஸ்திரங்களில் தேறினவனும், மற்ற மதத்தாருடைய வேதபுஸ்தகங்களை ஆராய்ந்தவனும் இருக்கிறதினாலே, மகா ஞானவான் என்று கீர்த்திபெற்றிருக்கிறான். ஒருநாள் அவன் தன் மடத்தில்

செபத்தியானம் செய்துகொண்டிருக்கையில், காசிக்குத் தீர்த்தமாடப்போகிற சிலர் அவனிடத்தில் வந்து: சுவாமி! நாங்கள் காசிக்குப் போகிறோம்; எங்களை ஆசீர்வதித்து அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவன் அவர்களைப் பார்த்து: உங்கள் யாத்திரையில் யாதொரு நாசமோசம் வராமல் நீங்கள் சுகத்தோடே உங்கள் வீடுகளில் சேரும்படி தெய்வதுணை உங்களோடிருப்பதாக என்று வாழ்த்தி, அவர்களில் ஒருவன் கையில் ஒரு பாகற்காயைக் கொடுத்து, இதை நீங்கள் கொண்டுபோய்க் கங்கையில் தோய்த்து மறுபடியும் என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொல்லி அனுப்பினான். அவர்கள் புறப்பட்டுக் காசியில் சேர்ந்து, கங்கையில் பிரதானமான தீர்த்தத் துறைகளில் இறங்கி ஸ்நானம் செய்கிறபொழுதெல்லாம் அந்தக் காயையும் தோய்த்துக்கொண்டார்கள். அவர்கள் தீர்த்தம் ஆடி முடிந்ததின்பின்பு புறப்பட்டு, தங்கள் ஊரில் வந்து சேர்ந்தார்கள். மறுநாளில் துக்காராம் என்ற அந்தச் சந்நியாசிக்கு, ஒரு பாத்திரத்தில் கங்கைச் சலமும், அவன் கொடுத்திருந்த பாகற்காயும் கொண்டு போய் அவனுக்கு முன்பாக வைத்து: சுவாமி!

உம்முடைய புண்ணியத்தினுலே நாங்கள் சேதம் இல்லாமல் எங்கள் ஊருக்கு வந்து சேர்ந்தோம்; இதோ! கங்கைத் தீர்த்தமும், நீர் கொடுத்த காயும் இருக்கிறது என்று சொல்லி, சாஷ்டாங்கம் பண்ணினுர்கள். சந்நியாசி அவர்களை நோக்கி: எழுந்திருங்கள்; நீங்கள் சுகத்தோடே திரும்பி வந்தது எனக்கு மிகவும் சந்தோஷம் என்ருன். பின்பு அவர்கள் பிரயாணத்திலும் காசியிலும் கங்கைத் தீரத்திலும் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் செய்தவைகளையும் விவரித்துக் காட்டினுர்கள். அதின் பின்பு அந்தச் சந்நியாசி தன் சீஷர்களில் ஒருவனை நோக்கி: கங்கையில் தோய்க்கப்பட்ட இந்தக் காயை எடுத்து, இவர்கள் உருசி பார்க்கும்படி ஒவ்வொருவனுக்கு ஒரு துண்டு கொடு என்ருன். அவன் கொடுக்க, அவர்கள் வாங்கித் தின்ருர்கள். சந்நியாசி அவர்களைப் பார்த்து: அதின் சுவை எப்படி இருக்கிறது என்று கேட்டான். அவர்கள்: இது மகா கசப்பாய் இருக்கிறது; நாங்கள் இதை எத்தனைதரமோ கங்கையில் தோய்த்திருந்தும் இதினுடைய கசப்பு இன்னும் மாறவில்லையே என்ருர்கள். அதைச் சந்நியாசி கேட்டு, சிரித்து, உங்களு

டைய எண்ணம் எப்படிப்பட்டது? ஒரு பதா
ர்த்தம் கங்கைச் சலத்தில் தோய்க்கப்படுகிறதி
னாலே, அதின் இயல்பு மாறிப்போகும் என்று
நினைக்கிறீர்கள்? ஒருபோதும் அப்படி ஆக
மாட்டாது. ஒரு குப்பிக்குள்ளே நாற்றமான
காடியை அடைத்துப் பின்பு கங்கையில் ஆயி
ரந்தரம் தோய்த்து எடுத்தாலும் அதின் உள்
ளிருக்கும் நாற்றம் மாறுமா? அந்தச் சலம்
குப்பியின் வெளிப்புறத்திலுள்ள அழுக்கை
நீக்குமே அல்லாமல், உள்ளே இருக்கும் அசுத்
தத்தை நீக்கமாட்டாதே. அப்படிப்போல கங்
கையில் தீர்த்தமாடின உங்கள் தேகத்திலுள்ள
அழுக்கை அது நீக்குமே அல்லாமல், நீங்கள்
தெய்வத்துக்கு விரோதமாய்ச் செய்த பாவங்க
ளையும், உங்கள் உள்ளத்தில் இருக்கிற துர்க்கு
ணங்களையும் துராசைகளையும் நீக்கமாட்டாது
என்று சொன்னான். அதை அவர்கள் கேட்டு
ஆச்சரியப்பட்டு: சுவாமி! அப்படியானால் நம்
முடைய பாவங்கள் தொலைகிறதற்கு வகை எ
ன்ன என்றார்கள். அவன்: அந்தப் பாவங்களைக்
குறித்து நாமே துயரப்பட்டு அவைகளை வெறுத்
துத் தள்ளிவிடவேண்டும் என்றான். அவன்
பாவநிவிர்த்திமார்க்கத்தைத் திட்டமாய்க் காண்

பியாவிட்டாலும் தான் அறிந்த அறிவுக்குத் தக்கதாகக் காட்டினன்.

இப்படி உங்களுக்குள் இருந்த ஞானிகளும் புத்திமான்களும் தீர்த்தம் ஆடுதல், பாவத்தை நிவிர்த்தியாக்கிக்கொள்ளுகிறதற்கு ஒரு வழி அல்ல என்று தெளிவாய்க் காண்பித்திருக்க, நீங்கள் தீர்த்தம் ஆடினுல் பாவம் தொலையும். என்று தப்பெண்ணங்கொண்டு ஏன் அலைகிறீர்கள்? நீங்கள் அப்படி அலைவதினாலே உங்களுக்கு வரும் இலாபம் என்ன? கீர்த்திபெற்றிருக்கிற ஸ்தலங்களில் தீர்த்தமாடக் குறிக்கப்பட்ட காலங்களில் திரள்திரளாய்ப் போகிற சனக்கூட்டத்துக்குள்ளே எத்தனைபேரோ அன்னபானங்கள் முட்டுப்படுவதினாலும், விஷபேதி முதலான கொள்ளை நோய்களினாலும் இடைவழியில் மாண்டு, அநாத பிரேதங்களாய் நாய் நரிகளுக்கும், காக்கை பருந்து கழுகுகளுக்கும் இரையாய்ப் போகிறார்கள். ஐயோ! இது எத்தனை பரிதாபம்.

சிநேகிதர்களே! நீங்கள் செய்கிறதை நீங்கள் தாமே உற்றுணராதிருக்கிறீர்கள். தீர்த்தமாடுவதினாலே பாவம் தொலையும் என்று நீங்கள்

ஒப்புக்கொண்டால், தீர்த்தமாடின ஒரு புலைய னைத் தீட்டில்லாதவன் என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமே. நீங்கள் அப்படிச் செய்கிறதில் லையே. அவன் எத்தனைதரம் தீர்த்தமாடினாலும் அவனை மகா தீட்டுள்ள சண்டாளன் என்று சொல்லி, மனித சஞ்சாரமுள்ள இராசபாதை களிலும் தெருவீதிகளிலும் இரங்கச் சம்மதியா மல், ஒரு மிருகத்திலும் கீழாய் எண்ணி, அவ னைத் தூரத்திவிடுவீர்களே; இதென்ன நியாயம்? உங்கள் பாவம் தீர்த்தம் ஆடுவதினாலே தீருமா னால், தீர்த்தம் ஆடின அந்தப் புலையனுடைய பாவம் தீராமல் இருப்பது எப்படி? இது உங் களைப் பிடித்த பிரமையே அன்றி வேறல்ல.

ஒருநாள் கடல்முழுகி உள்ளபாவமெல்லாம் தீருமென்றால்
பலநாள் கடல்முழுகுவர்க்குப் பாவமுண்டோ நயினாரே

என்றிருக்கிறபடி, ஒரொரு காலத்தில் கடற் கரையில் போய் ஸ்நானம்பண்ணுகிற உங்களு டைய பாவங்கள் எல்லாம் நீங்கிப்போகும் என்பது நிசமானால், நாள்தோறும் கடலிலே சென்று முழுகி மீன்பிடிக்கிறவர்களுக்குப் பா வமே இல்லை என்று சொல்லவேண்டுமே; அப் படிச் சொல்வது மதிகேடு அல்லவா? கேளுங்

கள்: பாவத்தின் தன்மை இன்னது என்றும், பாவிகளுடைய நிலைமை இன்னது என்றும் நீங்கள் அறியாதிருக்கிறதினாலே, இப்படி மோசம் போகிறீர்கள். பாவமானது மனிதர்களை வஞ்சித்து, சீர்கேடாக்கிறதும் அல்லாமல், சகல நன்மைகளுக்கும் காரணராகிய மெய்த்தேவனுக்கும், அவருடைய திவ்விய இலட்சணங்களுக்கும், அவர் அருளிச்செய்த பிரமாணத்துக்கும் விரோதமாய் இருக்கிறது. பாவமானது அவருடைய பத்திராசனத்தை எட்டக்கூடுமானால், அதையும் கவிழ்க்கப் பார்க்கும். இம்மை மறுமைக்குரிய சகல நிர்ப்பாக்கியங்களும் அதினாலே விளைகிறபடியால், அது பரிசுத்தமுள்ள தேவனால் அருவருக்கப்படத்தக்கதாயும், மனிதர்களால் வெறுக்கப்படத்தக்கதாயும் இருக்கிறது. இப்படி நாசமோசத்துக்கு உள்ளாக்குகிற பாவத்தை நீக்கத்தக்க வகையைத் தேடிக்கொள்வது முக்கியம் அல்லவா? ஆகையால், பாவநிவிர்த்தியின் வகையை இவ்விடத்தில் சுருக்கமாய்க் காண்பிக்கிறோம்; கேட்பீர்களாக.

தேவனே நமக்கு அந்த வகையைச் சத்திய வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். பாவி

களான மனிதர்கள் கெட்டுப்போகாமல் அவர்களைப் பாவத்தினின்று மீட்டு இரட்சிக்கிறதற்காகப் பரலோகத்திலும் பூலோகத்திலும், தேவதூதர்களுக்குள்ளும் மனிதர்களுக்குள்ளும் தகுதியுள்ள ஒருவனும் இல்லாததினாலே, தேவன் தம்முடைய ஒன்றான குமாரனையே இரட்சகராக இவ்வுலகத்தில் அனுப்பினார். அவர் மனித அவதாரம்பண்ணி, தேவ சித்தத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்தி, சன்மார்க்கத்தில் நடந்து காட்டினதும் அல்லாமல், பாவப்பிராயச்சித்தமாகப் பாவிகளுக்கு வரவேண்டிய தண்டனையைத் தாமே அநுபவித்து, பாடுபட்டு மரணம் அடைந்தார். அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்ட மூன்றாம் நாள் உயிரோடெழுந்திருந்து பரமண்டலத்தில் சென்று, பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்தினின்று, தம்மை விசுவாசத்தினாலே பற்றிக்கொள்ளுகிறவர்களுடைய சகல துர்க்குணங்களையும் மாற்றி, அவர்கள் இருதயங்களை சுத்திகரிக்கிறதற்காகப் பரிசுத்த ஆவியை அனுப்பிவருகிறார். அப்படியே விசுவாசிக்கிறவர்களுக்குத் தேவன் அருளிச்செய்திருக்கிற வாக்குத்தத்தமாவது:

நீங்கள் சுத்தமாகும்படிக்கு நான் புதிய ஆவியை உங்களுக்குள்ளே உண்டாக்கி, கல்லைப்போல கடினமான இருதயத்தை உங்கள் சரீரத்திலிருந்து எடுத்துத் தள்ளி, மாம்சத்தைப்போல மிருதுவான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன் என்று திருவுளம்பற்றியிருக்கிறார். ஆகையால், உங்கள் பாவ அசுத்தம் நீங்குகிறதற்கு நீங்கள் தீர்த்தயாத்திரை செய்து சங்கடப்படாமல், இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துநாதரை அறிந்து விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது அவர் தமது ஆவியானவரைக்கொண்டு உங்கள் பாவங்கள் அறக் கழுவி உங்களைச் சுத்திகரிப்பார்.

முற்றிற்று.